# எட்டுத்தொகை அகநூல்களில் சேரர் வரலாற்றுச் செய்திகள்

**இரா. ஸ்ரீதர்**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

### முன்னுரை

பண்டையத் தமிழகத்தில் செம்மாந்த ஆட்சி நடத்திய சங்கத் தமிழ் அரசர்கள், போரியல் வாழ்க்கை, கொடைத்திறன், ஆட்சித்திறன், நீதி, நிர்வாகம் ஆகியவை பற்றி சங்க புறப்பாடல்கள் சிறப்புற எடுத்துரைக்கின்றன எட்டுத்தொகை அகப்பாடல்களில் புறச்செய்திகள் பல கூறப்பட்டாலும் அகநூல்களில் சேரர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

### சங்க கால அரசர்கள்

சங்க காலத்தில் சிற்றரசர், தலைமையரசர், பேரரசர் எனத் தமிழக அரசர்கள் மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இம்முத்திறத்தாரும் முறையே குறுநிலவரசர், பெருநிலவரசர், பலநிலவரசர் ஆவார். சிற்றரசர்க்கு 'மன்னன்' என்னும் பெயரும் தலைமையரசர்க்கு 'வேந்தன்' என்னும் பெயரும் மரபாக இருந்தது. இதனை,

> **"வேந்திடை தெரிதல் வேண்டிய ஏந்துபுகழ்ப்**
> **போந்தே வேம்பே ஆரென வருஉம்"[1]**

என்னும் நூற்பாவின் வாயிலாக அறியமுடிகிறது.

### தமிழக மூவேந்தர்கள்

சங்கத்தமிழக நிலப்பரப்பு மூவேந்தர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைக் கொண்டே சங்க காலத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இவற்றை இலக்கியங்களின் வழி அறியலாகும் சங்கத் தமிழகத்தின் தோற்றக் காலத்திலிருந்ததே சேர, சோழ, பாண்டியர்களின் ஆதிக்கம் இருந்துள்ளதனை உணரமுடிகிறது.

"அன்றைய தமிழகப் பெருநிலத்தில் அரசு என்ற ஒன்று தோன்றிய போதே மூவேந்தர்கள் ஆட்சியைத்தான் காண்கிறோம். சேரன், சோழன், பாண்டியன் ஆகியோர் முடியுடை மன்னர்களாகவும் மற்றவர்கள் குறுநில மன்னர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இவர்களை 'வண்புகழ் மூவர்' என்று தொல்காப்பியம் போற்றுகிறது. இந்த மூவேந்தர் மரபு என்பது தொன்றுதொட்டு தொடர்ந்து பல்லாயிரம் கணக்கான ஆண்டுகள் ஆட்சி செய்து வந்ததைப்போல் உலகின் எந்நாட்டு அரசியல் வரலாற்றிலும் காணமுடியாது. இத்தகு பெருமை தமிழகத்திற்கும் தமிழக மூவேந்தர்களுக்கும் உரியதாகும்"[2]

**சேரரின் தொன்மை**

பழந்தமிழகத்தை ஆட்சி புரிந்த மூவேந்தருள் சேர வேந்தரே தொன்மை வாய்ந்த குடியினராக அறியப்படுகின்றனர். சேரர் என்பது குடிப்பெயராகத் திகழ்கிறது. புறநானூற்றில் சேரனைப் பற்றிய செய்திகள் முதலிலும் அடுத்த நிலையில் பாண்டியர்களும், அதற்கடுத்த நிலையில் சோழர்களும் சுட்டப்படுகின்றனர். எனவே முதலில் சேரர் தம் சிறப்பினை அறிய, தொல்காப்பியத்தில்

**“போந்தை வேம்பே ஆரென வரூஉம்”[3]**

என்னும் நூற்பா எடுத்தியம்புவதைக் காணலாம். இலக்கணத்திற்குத் தொன்மை வாய்ந்த தொல்காப்பிமும் சேரர்களைப் பற்றி முதலில் குறிப்பிட்டுள்ளது.

**அகநூல்களில் சேரர்கள்**

எட்டுத்தொகை அகநூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு. கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களில் கலித்தொகையைத் தவிர மற்ற நான்கு அகநூல்களிலும் சேரர்களைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றது. அவற்றுள் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெடு குட்டுவன், யானைக்கண்சேய் மாஞ்சேரல் இரும்பொறை, களங்காய்கண்ணி நார்முடிச்சேரலாதன், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன். சேரமான் குட்டுவன்கோதை, குட்டுவன், ஆதன் அவினி ஆகியோர்களின் வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன.

**பெருஞ்சோற்றுதியன் சேரலாதன்**

சேரர் மரபில் தொன்மையானவனாகச் சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் குறிப்பிடப்படுகின்றான். இவனுடைய இயற்பெயர் உதியஞ்சேரலாதன் என்பதாகும். சேர நாட்டை ஆண்ட மன்னர்களில் மிகவும் பழையோனாகிய இம்மன்னனைப் புறநானூறு பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்று குறிப்பிடுகிறது.

இதனை மாமூலனார்,

**“துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதலியர்ப் பேணிய உதியஞ்சேரல்”4**

என்கிறார்.

**“அலங்குளைப் புரவி ஐவரொடு சினை,
நிலந்தலைக் கொண்ட பொரலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்.”[5]**

என்னும் பாடலடிகள் பாரதப்போரில் பாண்டவர் ஐவருடனே பகைகொண்டு சினத்துடன் துரியோதனன் முதலிய கௌரவர் நூறுபேரும் போரிட்டு நலிவுற்ற நிலையில் இருக்கும்போது இருதிறத்துப் படைகளுக்கும் பெருஞ்சோறு வழங்கினான் என்ற சிறப்பினால் இவனுக்கு இப்பெயர் ஏற்பட்டது என்று புறநானூறு சுட்டுகிறது.

வரலாற்று ஆய்வாளர்கள் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்பவனும், உதியஞ்சேரலாதன் என்பவனும் வெவ்வேறு காலகட்டத்தில் வாழ்ந்தவர் என்று குறிப்பிடுகின்றனர். இதனை அறிய “கி.பி பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனையும், கி.பி முதல் நூற்றாண்டில் வாழ்ந்த உதியஞ்சேரலும் ஒருவரே எனக்கொண்டு வரலாற்றைக் குழப்பி உள்ளனர். புறநானூறு இரண்டாவது பாடல் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனையும், அகநானூறு 65, 168, 233 ஆகிய பாடல்கள் குறிப்பிடுவன உதியஞ்சேரலாதனையும் பற்றியது எனக்கொண்டால் குழப்பத்திற்கு இடமில்லை”[6] என்று சு.இரத்தினசாமி கூறுகின்றார்.

பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் பற்றிய செய்தியினை நற்றிணைக் கூறுகிறது. இதனை,

**“உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின்
இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும்
ஆம்பல் அம்குழலின் ஏங்கி”[7]**

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

உதியஞ்சேரலாதன் தனது சமகாலத்துச் சோழ மன்னனாகிய கரிகாற்சோழனுடன் போரிட்டுப் புறப்புண் அடைந்தான். அதனால் வடக்கிருந்து உயிர் துறந்தான். இதனை,

**"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்**
**பொருதுபுண் நாணிய சேரலாதன்**
**அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென**
……… ……………. …………….
…………. ………… …….. ………..
**பெரும்பிறி தாகி யாங்கு"**[8]

என்னும் அகநானூற்று பாடல் மூலம் அறியமுடிகிறது.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**

உதியஞ்சேரலாதன் மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆவான். பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தின் தலைவன், "இமயவரம்பன் என்ற சிறப்புப் பெயரால் இம்மன்னன் இமயமலைவரை தனது எல்லையாகக் கொண்டிருந்தவன் என்ற சிறப்பின் காரணமாக இப்பெயர் எழுந்துள்ளது"[9] என்று அ.சிதம்பரனார் குறிப்பிடுகிறார். இவன் கடற்போரில் சிறந்து விளங்கியுள்ளான். இவன் கடலிடத்தே நாவாய்ச் செலுத்திக் கடம்பினை அறுத்த வெற்றி முரசினைக் கொண்டவன். பகைவர்களை வென்று அவர்களின் காவல் மரமாகிய கடம்பை அழித்த பெருமைக்குரியவனாக விளங்குவதனையும், தனது வெற்றிக்கு அடையாளமாக இமயமலையில் விற்பொறியை நாட்டினான் என்பதனையும், தனது தலைநகரில் பகைவர்கள் பணிந்தேத்தித் திரை செலுத்தும்படியாகச் செய்தவன் என்பதனையும் அகநானூறு புலப்படுத்துகின்றது. இதனை,

**"வலம்படு முரசிற் சேர லாதன்**
**முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து இமையத்து**
……….. …………………………..
……….. ………….. ………. ………..
**நிலம்தினத் துறந்த நிதியத்து அன்ன."**[10]

என்ற பாடலடிகள் வாயிலாகக் காணமுடிகின்றது.

மேலும்,

**"சால்பெருந் தானைச் சேரலாதன்**
**மால்கட லோட்டிக் கடம்பறுத் தியற்றிய**
**பண்ணமை முரசின் கண்ணதிர்ந் தன்ன**
**கவ்வை தூற்றும் செவ்வாய்ச் சேரி."**[11]

என்னும் அகநானூற்றுப் பாடலடிகள் புலப்படுத்துகின்றது.

**பல்யானைச் செல்கெழுகுட்டுவன்**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் உடன்பிறந்தவன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஆவான். பதிற்றுப்த்தில் மூன்றாம் பத்தில் பாலைக் கௌதமனார் இவனைப் பற்றி புகழ்ந்து பாடியுள்ளார்.

"செல்கெழுகுட்டுவன் புகழும் செயல்திறமும் வெற்றியும் உடைய வீரன் ஆவான். அவன் கொங்கரை வென்று சேர நாட்டுக்கு அருகில் இருந்த நாட்டைக் கைப்பற்றினான். அந்நாட்டின் மக்களுக்கு ஆநிரை வளர்த்தலே முக்கியத் தொழிலாகும். அந்நாட்டை கைப்பற்றும்பொருட்டு, பாண்டியர், கொங்கர், சோழர் ஆகியோரிடைப் பல போர்கள் நிகழ்ந்தன. எடுத்துக்காட்டாக, சிராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் என்னும் சோழன் கொங்கு நாட்டைக் கைப்பற்றினான். பசும்பூண் பாண்டியன் கொங்கு நாட்டைக் கைப்பற்ற முயன்றான். ஆய் அண்டிரன் என்னும் குறுநில மன்னன் அந்நாட்டைக் கைப்பற்ற முயன்றான். இந்நாடு வலிமையான அண்டை நாடுகளின் தாக்குதலுக்கு அணித்தாக இருந்தமையால், அதன் மக்கள் எப்பொழுதும் முழுமையான போர் பயிற்சி பெற்றிருந்தனர். அவர்களை வெல்லுதல் எளிதன்று. ஆகையால், செல்கெழுகுட்டுவன் இவர்கள்மீது பெற்ற வெற்றியை

அவனுடைய போர் வலிமையை நிறுவுவதாகக் கருதலாம். அவன் குதிரைப் படையையும் வைத்திருந்தான். அவன் பல இயந்திரங்களால் காக்கப்பட்ட உம்பர்க்காடு எனும் பகைவருடைய கோட்டையைக் கைப்பற்றினான். அயல்நாடுகளிலிருந்து படையெடுத்துவரும் பகைவருடைய சேனையைத் தடுத்து நிறுத்தவல்ல அயிரை மலையை இவன் கைப்பற்றினான். அவன் பூழி நாட்டையும் ஆட்சி செய்தான்."[12] என்று பல்யானைச்செல்கெழு குட்டுவனின் சிறப்பினை வ.குருநாதன் எடுத்துக் கூறியுள்ளார்.

மேலும் அவன் ஆட்சித்திறனும், போர்திறனும் மிக்கவன்,

**"மறப்படைக் குதிரை மாறா மைந்தின்**
**துறக்க மெய்திய தொய்யா நல்லிசை**
**முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்**
**பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை."[13]**

எனும் பாடலடிகள் மூலம் குட்டுவன் கோதையின் சிறப்பை அறியமுடிகிறது.

**யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை**

"இவன் செல்வக்கடுங்கோ வாழியாதன் காலத்தை ஒட்டியவன். மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் பெயரால் அந்துவஞ்சேரல் இரும்பொறையோடும் மாந்த மாந்தரம் பொறையன் கடுங்கோவென்னும் பெயரால் செல்வக் கடுங்கோ வாழியாதனோடும் இவன் ஒருமையுற்று உணரப்படுகிறான்."[14] என்று வ.குருநாதன் கூறியுள்ளார். எனவே சங்கப் புறப்பாடல்களிலும் அகப்பாடல்களிலும் இவனது கல்வி, தறுகண், இசைமை, கொடைச்சிறப்பு ஆகியன போற்றியுரைக்கப்படுகின்றன. இவனது கொடைச் சிறப்பினை

**"இலமல ரன்ன அஞ்செந் நாவின்**
**புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்**
**………. ……. …….. ……….**
**………. ……. …….. ……….**
**உவவினி வாழிய நெஞ்சே."[15]**

என்ற அகநானூற்றின் பாடலடிகளின் மூலம் அறியலாம்.

**கலங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலாதன்**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மனைவியின் மகனாவன். பல்யானைச் செல்கெழுகுட்டுவனைத் தொடர்ந்து களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான். இவன் பதிற்றுப்பத்தில் நான்காம் பத்திற்குத் தலைவனாகக் கொண்டு காப்பியாற்றுக் காப்பியனார் புகழ்ந்து பாடியுள்ளார். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் நன்னன் மீது படையெடுத்து அவனை வெற்றிகொண்டதுடன், தனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசனாகவும் மாற்றினான். இதனை,

**"பெருந்தோள் அரிவை ஒழியக் குடாஅது**
**இரும்பொன் வாகைப் பொருநீதுறைச் செருவில்**
**பொலம்பூண் நன்னன் பொருதுகளத்து ஒழிய**
**வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்**
**களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்**
**இழந்த நாடு தந்தன்ன**
**வளம்பெரிது பெறிலும் வாரலென் யானே."[16]**

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

இச்சேர மன்னனைப்பற்றி நற்றிணை புறநானூறு போன்ற நூல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

**கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்**

சேரன் செங்குட்டுவனைப் பற்றி பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தின் தலைவனாகக் கொண்டு பரணர் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவன் கடற்போரில் சிறந்து விளங்கினான் என்றும், பகைவர்களை இமயம் வரை சென்று அழித்தான் என்றும் கூறுவர். மேலும் கண்ணகிக்குச் சிலையெடுத்தாகச் சிலம்பில் குறிக்கப்பெறுகிறது. இவன் கடற்போரில் ஈடுபட்ட சிறப்பினை,

**“படைநிலா இலங்கும் கடல்மருள் தானை**
**மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்**
**பொருமுரண் பெறாஅது விளங்கு சினம்சிறந்து**
**செருச்செய் முன்பொகு முந்நீர் முற்றி**
**ஓங்குதிரைப் பௌவம் நீங்கு ஓட்டிய**
**நீமான எ.்.கம் நிறத்தும் சென்றமுழந்தக்**
**கூர்மதன் அழியரோ நெஞ்சே.”[17]**

என்னும் அகநானூற்றுப் பாடலடிகளின் மூலம் அறியமுடிகிறது.

மேலும்,

**“கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டி**
**காண்நவில் கானம் கணையின் போகி**
**ஆரிய அண்ணலை வீட்டி பேர்இசை**
**இன்பால் அருவிக் கங்கை மண்ணி**
**இனம்தெரி பல்ஆன் கன்றொடு கொண்டு**
**மாறா வல்வில் இரும்பிற் குறத்து இறுத்து.”[18]**

என்னும் பாடலடிகள் கண்ணகிக்குச் சிலையெடுத்ததைப் பற்றிக் கூறுகிறது.

**சேரமான் குட்டுவன் கோதை**

தொண்டியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்தவன். இவனது சிறப்பினைப் பற்றி அகநானூற்றில் கூறப்படுகிறது. இதனை

**“இழையணி யானைப் பழையன் மாறன்**
**மாடலி மறுகிற் கூடல் ஆங்கண்**
**வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த**
**கிள்ளி வளவன் நல்லாமர் சாஅய்க்**
**கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி**
**ஏதில் மன்னர் ஊர்கொளக்**
**கோதை மார்பன் உவகையிற் பெரிதே.”[19]**

என்னும் பாடலடிகளின் மூலம் குட்டுவன் கோதை எனும் சேர மன்னன் பற்றி அறியமுடிகிறது.

**குட்டுவன்**

குட்ட நாட்டைச் சார்ந்தவன் ஆதலின் குட்டுவன் கோதை என்னும் பெயரால் அழைக்கப்பட்டான். இம்மன்னன் மேலைக்கடற்கரையைச் சார்ந்த மாந்தைப் பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிப் புரிந்தவன். இவனைப் பற்றி நற்றிணையில் கூறப்படுகிறது.

**“………… குட்டுவன்**
**அகப்பா அழிய நூறி செம்பியன்**
**பகல்தீ வேட்ட ஞாட்பினும் மகிப்பெரிதே.”[20]**

என்னும் பாடலடிகளின் வாயிலாக மாமூலனார் குட்டுவனின் சிறப்பினைக் கூறுகின்றார்.

**“………. குட்டுவன்**
**குடவரைச் சுனைய மாஇதழ்க் குவளை**
**வண்டுபடு வான்போது கமழும்**
**அஞ்சில் ஓதி அரும்படர் உறவே.”[21]**

என்னும் பாடலடிகள் வாயிலாக குட்டுவனைப் பற்றி முடத்திருமாறன் கூறியுள்ளார்.

**“கடம்பகட்டு யானை நெடுந்தேர்க் குட்டுவன்**
**வெந்துஅடு மயக்கத்து முரசு அதிர்ந்தன்ன.”[22]**

என்னும் பாடலடியின்மூலம் அம்மூவனார் குட்டுவனின் புகழினைப் பாடியுள்ளார்.

**“யானையங் குருகின் கானல்அம் பெருந்தோடு**
**அட்ட மள்ளர் ஆர்ப்புஇசை வெரூஉம்**
**குட்டுவன் மாந்தை அன்னஎம்,”[23]**

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கப்படுகிறது.

அகநானூற்றுப் பாடல் எண் 91இல் பரணர்குட்டுவனின் கடலினை முற்றிப் பகைவரையழித்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

**இரும்பொறை மரபினர்**

செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகிய மூவர்குறித்த செய்திகளைப் பற்றிப்பதிற்றுப்பத்தில் கூறப்படுகிறது. இம்மன்னர் மூவரும் இரும்பொறை மரபினைச் சேர்ந்தவர்கள்.

தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, அதியமான் நெடுமான் அஞ்சியை வெற்றிக்கொண்டு அவனுடைய தகடூரை எறித்தழித்தமையால் ‘தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை’ என்ற பெயரினைப் பெற்றான்.

**“வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்**
**வில்பயில் இறும்பின் தகடூர் நூறிப்**
**பேஎம் மன்ற பிறழ்நோக்கு இயவர்**
**ஓடுறு கடுமுரண் துமியச் சென்று**
**வெம்முனை தபுத்த காலை, தம்நாட்டு**
**யாடுபரந் தன்ன மாவின்**
**ஆபரந் தன்ன யானையோன்.”[24]**

என்ற பாடலடிகள் தகடூரை வென்ற வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுகின்றன

அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்கள்மூலம் கோக்கோதை மார்பன் என்று அழைக்கப்படும் சேரமான் குட்டுவன் கோக்கோதை, சேரமான் கணைக்கால் இரும்பொறை ஆகிய சேர அரசர்கள் பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. சேரமான் கணைக்கால் இரும்பொறையின் சிறப்பினைக் குறித்துப் பேசுகிறது. இதனை,

**“நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி**
**துன்னருங் கருந்திறல் கங்கண் கட்டி**
**பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு**
**அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்**
**பருந்துபடப் பண்ணிய பழையன் பட்டெனக்**
**கண்டது தோனால் ஆகித் திண்டேர்க்**

**கணையன் அகப்படக் கழுமலம் தந்த**
**பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி.”[25]**

என்னும் அகநானூற்றுப் பாடலடிகள் புலப்படுத்துகிறது.

மேலும்,

**“கானலந் தொண்டிப் பொருநன் வென்வேல்**
**தெறலருந் தானைப் பொறையன்.”[26]**

என்ற பாடலடிகளின் மூலம் நற்றிணைச் சுட்டுகிறது.

**ஆதன் அவினி**

ஐங்குறுநூறு நூலில் சேர மன்னர்களில் ஆதன் அவினி பற்றிய செய்தி காணப்படுகிறது. மருதத்திணையில் முதற் பத்துப் பாடல்களில் இம்மன்னனைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இதனை,

**“வாழிய ஆதன் வாழி அவினி**
**நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க.”[27]**

என்னும் பாடலடிகளின் வாயிலாக அறியமுடிகிறது.

**முடிவுரை**

சேர மன்னர்களைப் பற்றி முழுக்க பதிற்றுப்பத்தில் கூறப்படுகிறது. இதனைச் சேரர்களின் கலைக்களஞ்சியம் என்றும் கூறுவர். சேர மன்னர்களின் போர்த்திறம், வெற்றி, கொடை, வீரம், ஆட்சிபுரிந்த நாடுகள், பகைவர்களை அழித்த செயல்கள் ஆகியன அகநூல்களில் காணப்படுகின்றன காதலைப் பற்றிக் கூறும் அகஇலக்கியத்தில் உவமைக்காக வேந்தர்களைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவற்றை அடிப்படையாகக்கொண்டு சேர மன்னர்களின் புறச்செய்திகள் கண்டறியப்பட்டுள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. தொல். பொருள். நூ.1078
2. இராமகிருஷ்ணன், எஸ். தமிழர் அரசியல், ப.13.
3. தொல். பொருள். நூ.1078
4. அகநானூறு, பா.233: 7-8
5. புறநானூறு. பா.2: 13-16
6. இரத்தினசாமி. சு. சங்க கால அரசர்கள். ( கால வரிசை ) ப.53
7. நற்றிணை. பா. 113: 9-11
8. அகநானூறு. பா. 55: 10-15
9. அ.சிதம்பரனார். சேரர் வரலாறு. ப.34
10. அகநானூறு. பா.127: 3-11
11. மேலது. பா.347: 3-6
12. குருநாதன். வ. சங்க கால அரச வரலாறு. ப.75
13. அகநானூறு. பா.233
14. குருநாதன். வ. சங்க கால அரச வரலாறு. ப.90
15. அகநானூறு. பா.142
16. மேலது. பா.199: 18-24
17. மேலது. பா.212: 15-21
18. பதிற்றுப்பத்து, 5ம் பத்து. பதிகம்.4-9
19. அகநானூறு. பா.346: 19-25
20. நற்றிணை. பா.14: 3-5

21. மேலது. பா.105: 7-10
22. மேலது. பா.395: 4-5
23. குறுந்தொகை. பா.34: 5-7
24. பதிற்றுப்பத்து. பா.78: 8-16
25. அகநானூறு. பா.44: 7-14
26. நற்றிணை. பா.18: 5-6
27. ஐங்குறுநூறு. வேட்கை பத்து. பா- .ள் 1-10